**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, அரக்கோணம்**
**முன்னிலை**: செல்வி.அ.அமீனா, B.B.A., L.L.B (Hons).,
நீதித்துறை நடுவர் எண். 1 (மு.கூ.பொ),
அரக்கோணம்.
2026 ம் ஆண்டு ஜீன் 18 ம் நாள் செவ்வாய்கிழமை
*M.C.No.17/2018*
*(CNR.No.TNRP09-000162-2018)*

பிரியா,
க/பெ. L.V.விஜயக்குமார்,
நெ.9, 3 வது தெரு,
டவுன் ஹால் ரோடு,
அரக்கோணம் வட்டம்,
இராணிப்பேட்டை மாவட்டம்–631001. ... மனுதாரர்கள்

//எதிர்//

L.V.விஜயக்குமார்,
த/பெ.வெங்கடபதி,
கதவு எண்.6, மனை எண்.238,
பிரசாத் தெரு, இராஜம்மாள் நகர்,
அய்யப்பாக்கம்,
சென்னை–600077. ... எதிர்மனுதாரர்

இந்த மனு 02.05.2018 ம் தேதியன்று இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, மனுதாரர்கள் தரப்பில் அறிவார்ந்த வழக்கறிஞர் திரு. R.சிவக்குமார் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் அறிவார்ந்த வழக்கறிஞர் திரு.M.ஜெயக்குமார் ஆஜராகியும், 18.06.2026 ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்து, இருதரப்பும் கேட்கப்பட்டு, வழக்காவணங்கள் பரிசீலனை செய்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**<u>உத்தரவு</u>**

மனுதாரர்களுக்கு மாத ஜீவனாம்சமாக தலா ரூ.15,000/–த்தை எதிர்மனுதாரர் வழங்க உத்தரவிட கோரி குற்றவியல் விசாரணை முறை சட்டம் பிரிவு 125 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>மனு சுருக்கம் :</u>**

(*i*) மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் 18.10.2010 ம் தேதி அண்ணாமலையார் A/C திருமண மாளிகை, திருத்தணியில் இந்து முறைப்படி திருமணம் நடைபெற்றது. மனுதாரரின் தாயார் திருமணத்திற்கு 6 லட்சத்திற்கு மேல் செலவு செய்துள்ளார்.

*(ii)* திருமணத்திற்கு பிறகு எதிர்மனுதாரர் அடிக்கடி மனுதாரருடன் சண்டை போட்டு தாய் வீட்டிற்கு அனுப்பிவிடுவார். எதிர்மனுதாரர் குடித்துவிட்டு மனுதாரரை அசிங்கமான வார்த்தைகளில் திட்டுவார். 17.10.2011 ம் தேதி மனுதாரருக்கு ஆண் குழந்தை பிறந்தது, பிரசவத்தின்போது எதிர்மனுதாரர், மனுதாரருடன் இல்லை, எதிர்மனுதாரருக்கு குழந்தை பிறந்த தகவலை தெரிவிப்பதற்கு மனுதாரரின் தாயார் அழைத்தபோது எதிர்மனுதாாரர் அழைப்பை ஏற்கவில்லை.

*(iii)* எதிர்மனுதாரர், மனுதாரரை வீட்டை விட்டு வெளியே அனுப்பிவிட்டதால் மனுதாரர் அவரது தாயாருடன் 5 வருடங்களாக வாழ்ந்து வருகிறார். மனுதாரர் வறுமையில் வாழ்ந்து வருகிறார்கள். எதிர்மனுதாரர் புளுகிராஸ் லேபாரிட்டிஸ் நிறுவனத்தில் மண்டல மேலாளராக வேலை செய்து கொண்டு மாதம் ரூ.60,000/– வருமானம் ஈட்டி வருகிறார். எனவே

மாதம் ரூ.20,000/- ஜீவனாம்சம் வழங்க கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. <u>**எதிருரை சுருக்கம்:**</u>

*(i)* மனு அம்சங்கள் மறுக்கப்பட்டு, மனு பொய்யான சங்கதிகளை தெரிவித்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது. திருமணத்தின்போது மனுதாரரின் பெற்றோர் மனுதாரருக்கு எத்தனை சவரன் நகை போடுகிறார்கள் என்று எதிர்மனுதாரரோ, அவரின் பெற்றோரோ கேட்கவில்லை. திருமணத்திற்கு பிறகு மனுதாரரும், எதிர்மனுதாரரும் சந்தோஷமாக வாழ்ந்து வந்தார். அதன் பிறகு மனுதாரர் அவர் தாயார் வீட்டிற்கு சென்று வருவதாக கூறி 10 நாட்கள் அங்கேயே தங்கி விட்டார். அதன்பின்பு வீட்டிற்கு வந்த அவரிடம் சற்று மாற்றம் தெரிந்தது. அதன் பிறகு மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. தனிக்குடித்தனம் வைக்கச் சொல்லி மனுதாரரின் பெற்றோர்கள் கட்டாய படுத்தினார்கள்.

*(ii)*எதிர்மனுதாரர் மற்றும் அவரது குடும்பத்தார், மனுதாரரை கொடுமைபடுத்தவில்லை. மனுதாரர், எதிர்மனுதாரருக்கு மனஉளைச்சலை ஏற்படுத்தி கொடுமை படுத்தியதாலும், தனிமை படுத்திவிட்டு சென்றதாலும் அவரிடம் இருந்து விவாகரத்து பெற வேண்டி மாண்பு மிகு சார்பு நீதிமன்றத்தில் விவாகரத்து கோரி H.M.O.P 73/2024 தாக்கல் செய்துள்ளார். மேற்படி மாண்புமிகு சார்பு நீதிமன்றம் 07.12.2018 ல் மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் விவாகரத்து தீர்ப்பு வழங்கியது. மேற்படி மனு நிலுவையில் இருந்தபோது மனுதாரர், எதிர்மனுதாரருடன் சேர்ந்து

வாழ்வதற்கு H.M.O.P No. 90/2013 தாக்கல் செய்தார். மேற்படி மனு திரும்ப பெறப்பட்டது.

*(iii).* மொத்தமாக நிரந்தர ஜீவனாம்சம் தொகையாக ரூபாய் *4* லட்சம், அதில் குழந்தைக்கு *3* லட்சம், மனுதாரருக்கு *1* லட்சம் வேண்டும் என்று மனுதாரர் கோரி ஒருமித்த விவாகரத்து மனு தாக்கல் செய்தும் எதிர்மனுதாரர் மேற்படி நிபந்தனையின் படி பணத்தை மனுதாரரின் வங்கியில் செலுத்தியுள்ளார். மனுவில் ஒப்புக் கொண்ட நிபந்தனைக்கு சட்ட விரோதமாக 6 லட்சம் வேண்டும் என்று கோரிக்கை விடுத்து எதிர்மனுதாருக்கு மனஉளைச்சலை ஏற்படுத்தியுள்ளார். மனுதாரர் நீதிமன்றத்திற்கு வராத காரணத்தினால் மேற்படி மனு *H.M.O.P No. 94/2016* தள்ளுபடி செய்யப்பட்டது.

(iv) எதிர்மனுதாரர் புளுகிராஸ் லேபாரிட்டி லிமிடெட் நிறுவனத்தில் 12.10.2005 ல் உதவி மேலாளராக பணியில் சேர்ந்ததாகவும், பிறகு மண்டல மேலாளராக பதவி உயர்வு பெற்று மாதம் ரூபாய் 25,000/- பெற்று வந்த நிலையில் வீட்டில் மனுதாரர் கொடுத்த மன உளைச்சல் காரணமாக சரிவர வேலை செய்யாததால் பதவி இறக்கம் செய்து Area Sales Manager ஆக்கி ரூபாய் 18,000/- சம்பளம் குறைத்து வழங்கியதால் பணியில் இருந்து 2011 ல் ராஜினாமா கடிதத்தை கொடுத்துள்ளார். தற்போது எந்தவித வேலையும் செய்யாமல் மன உளைச்சலோடு வாழ்ந்து வருவதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

(V). மனுதாரர் நன்கு படித்தவர், இடைநிலை ஆசிரியர் பயிற்சி முடித்தவர், தற்போது அரக்கோணத்தில் தனியார் பள்ளி ஒன்றில் ஆசிரியையாக பணியாற்றி போதுமான சம்பளம் பெற்று வருகிறார். அவரை அவரே பராமரித்துக் கொள்ள போதுமான சக்தியும் வாய்ப்பும் உள்ளது. எதிர்மனுதாரரை தொல்லை செய்ய மனுதாரர் இந்த மனு தாக்கல் செய்துள்ளார். மனுவை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

4. மனுவில் தீர்விற்குரிய பிரச்சனை மனு அனுமதிக்கப்படக்கூடியதா?

5. இருதரப்பும் கேட்கப்பட்டது. மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர் ம.சா.1 ஆகவும், வாசுகி என்பவர் ம.சா.2 ஆகவும் விசாரணை செய்யப்பட்டு, ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.9 வரை ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரர் எ.சா.1 ஆகவும், வெங்கடபதி என்பவர் எ.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்டு, எ.சா.ஆ.1 முதல் எ.சா.ஆ.11 வரை ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6.மனுதாரர், எதிர்மனுதாரருக்கு 18.10.2010ம் தேதி திருமணம் நடைபெற்றது என்பது குறித்து வழக்கில் பூசல் இல்லை. மனுதாரர், எதிர்மனுதாரர் திருமண அழைப்பிதழ் ம.சா.ஆ.1 ஆகவும், திருமண புகைப்படம் ம.சா.ஆ.2 ஆகவும், மனுதாரரின் ஆதார் அட்டை நகல் ம.சா.ஆ.3 ஆகவும், ம.சா.2ன் ஆதார் அட்டை நகல் ம.சா.ஆ.4 ஆகவும், திருவள்ளூவர் உதவி மருந்து கட்டுப்பாட்டு பொது தகவல் அதிகாரி வழங்கிய தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழான பதில் ம.சா.ஆ.5 ஆகவும், எதிர்மனுதாரர் புகைப்படம் ம.சா.ஆ.6 ஆகவும், கூகுள் வலைதளத்தில் இருந்து எடுக்கப்பட்ட

பிரிண்ட் அவுட் நகல் ம.சா.ஆ.7 ஆகவும், ஸ்ரீராம் மெடிக்கல்ஸ் 2023-2024 வருடத்திற்கான GST வரி செலுத்தியதற்கான ஆவண நகல் ம.சா.ஆ.8 ஆகவும், ஸ்ரீராம் மெடிக்கல்ஸ் 2024-2025 வருடத்திற்கான GST வரி செலுத்தியதற்கான ஆவண நகல் ம.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. எனவே மனுதாரர்கள் தரப்பில் எதிர்மனுதாரர், மனுதாரர் கணவன், மனைவி என்று நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்று இந்த நீதிமன்றம் முடிவு காண்கிறது.

7. மனுதாரர் எதிர்மனுதாரருக்கு மனஉளைச்சல் கொடுப்பதாலும், மனுதாரர் அரக்கோணம் பள்ளியில் ஆசிரியையாக வேலை செய்து அவரால் அவரை பராமரித்துக் கொள்ள முடியும் என்பதால் அவருக்கு ஜீவனாம்சம் கிடைக்கக் கூடியதல்ல என்று எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிட்டார்.

8. குற்றவியல் விசாரணை முறை சட்டம் பிரிவு 125ன் கீழான நடவடிக்கைகள் சுருக்கு வழக்கு நடைமுறையை சார்ந்ததாகும். யார் தவறு செய்தார்கள் என்று இந்த வழக்கில் தீர்மானிக்க முடியாது. இது குறித்து பார்க்கும்போது, மாண்புமிகு உச்ச நீதிமன்றம் கீழ்கண்ட வழக்கில் கீழ்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது,

***Sunita Kachwaha And Ors -Vs- Anil Kuchwaha (Cr.A.No.2310/2014 )***
***(28 October, 2014)***

*The Hon'ble Supreme Court of India held in paragraph 8 that, "The proceeding under Section 125 Cr.P.C. is summary in nature. In a proceeding under Section 125 Cr.P.C., it is not necessary for the court to ascertain as to who was in wrong and the minute details of the*

*matrimonial dispute between the husband and wife need not be gone into.*

*9. Inability to maintain herself is the pre-condition for grant of maintenance to the wife. The wife must positively aver and prove that she is unable to maintain herself, in addition to the fact that her husband has sufficient means to maintain her and that he has neglected to maintain her."*

9. எனவே இந்த மனுவில் யார் மீது தவறு உள்ளது என்று தீர்மானிக்க முடியாது. எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் மனுதாரர் ஆசிரியராக வேலை செய்துகொண்டு வருமானம் ஈட்டி வருவதால் அவருக்கு ஜீவனாம்சம் கிடைக்க கூடியதல்ல என்று வாதிட்டார்.

10. எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர் ஆசிரியராக பணியாற்றி வருவதாக தெரிவித்திருந்தபோதிலும், அதற்கு ஆதரவாக ஆவணம் சாட்சியம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. மனுதாரர் வேலை செய்து வருவதற்கு ஆதரவாக ஆவண சாட்சியம் தாக்கல் செய்யாமல், மனுதாரருக்கு ஜீவனாம்சம் கிடைக்க கூடியதல்ல என்று எதிர்மனுதாரர் தரப்பில் வாதிடுவது ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை. ம.சா.1 சாட்சியத்தில் அவர் வறுமையில் வாழ்ந்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதை முரண்படுத்தும் வகையில் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை அமைய பெறவில்லை. எனவே மனுதாரருக்கு போதுமான வருமானம் இல்லை மனுதாரர்கள் தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்று இந்த நீதிமன்றம் முடிவு காண்கிறது.

11. மனுதாரர்கள் தரப்பில் எதிர்மனுதாரர் புளுகிராஸ் லேபாரிட்டி தனியார் நிறுவனத்தில் மண்டல மேலாளராக பணியாற்றி வருவதாக

தெரிவிக்கப்பட்டுள்ளது. எதிருரையில் எதிர்மனுதாரர் வேலை இல்லை என்று தெரிவித்துள்ளார். ம.சா.ஆ.7 பரிசீலித்து பார்த்த போது எதிர்மனுதாரர் மெடிக்கல் நடத்தி வருவது தெரியவருகிறது. மேலும் எ.சா.1 தனது குறுக்கு விசாரணையில் கீழ் வருமாறு கூறியுள்ளார்.

" 2023ம் வருடத்தில் இருந்து நான் மேற்படி மெடிக்கல் கடைக்கு GST வரி செலுத்தி வருகிறேன் என்றால் சரிதான்."

மேலும் எதிர்மனுதாரர் மூலமாக ம.சா.ஆ.8 ஸ்ரீராம் மெடிக்கல்ஸ் 2023–2024ம் வருடத்திற்கான GST வரி செலுத்தியதற்கான ஆவணம், ம.சா.ஆ.9 ஸ்ரீராம் மெடிக்கல்ஸ் 2024–2025ம் வருடத்திற்கான GST வரி செலுத்தியதற்கான ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. ம.சா.ஆ.7, ம.சா.ஆ.8, ம.சா.ஆ.9 ஆவணங்களை பரிசீலித்து பார்த்த போது எதிர்மனுதாரருக்கு மாத வருமானம் 3 லட்சம் பெறுகிறார் என்று தெரியவருகிறது.

எதிர்மனுதாரர் அவரது எதிருரையில் மனுதாரர் ஆசிரியர் வேலை செய்து வருவதாக தெரிவித்துள்ளார். ம.சா.1 குறுக்கு விசாரணையில் மனுதாரர் கீழ்வருமாறு கூறியுள்ளார். "நான் தற்போது வேலைக்கு செல்கிறேனா என்றால், எனது வீட்டில் 5ஆம் வகுப்பு படிக்கும் பக்கத்து வீட்டை சேர்ந்தவர்களுக்கு டியூசன் எடுத்து வருகிறேன்" மனுதாரர் குறுக்கு விசாரணையில் 5ஆம் வகுப்பு மாணவர்களுக்கு டியூசன் எடுப்பதாக ஒப்புக்கொண்டுயிருந்தாலும், மனுதாரர் அவர் வாழ்வாதாரத்தை பார்த்துக் கொள்வதற்கு போதுமான வருமானம் ஈட்டி வருகிறார் என்று எதிர்மனுதாரர் நிரூபிக்க வேண்டும். ஆனால் எதிர்மனுதாரர் மனுதாரர் போதுமான வருமானம்

பெற்று வருவதாக நிரூபிப்பதற்கு போதுமான ஆவணம் தாக்கல் செய்யவில்லை. எனவே மனுதாரருக்கு போதுமான வருமானம் இல்லை என்றும் எதிர்மனுதாரருக்கு போதுமான வருமானம் உள்ளது என்று மனுதாரர் தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்று இந்த நீதிமன்றம் முடிவு காண்கிறது.

11. எதிர்மனுதாரர் அவரது எதிருரையில் அவருக்கு வருமானம் இல்லை என்று தெரிவித்துள்ளார். தனக்கு போதுமான வருமானம் இல்லை என்று கணவன், மனைவி மற்றும் மைனர் மகனை பராமரிக்க மறுக்க இயலாது. இது குறித்து பார்க்கும்போது மாண்புமிகு மேலமை நீதிமன்றம் கீழ்கண்ட வழக்குகளில் கீழ்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது,

***Reema Salkan -Vs- Sumer Singh Salkan***

***Criminal Appeal No.1220/2018, Date:25.09.2018***

*The Hon'ble Supreme Court of India held in para "83. The respondent's mere plea that he does not possess any source of income ipso facto does not absolve himself of his moral duty to maintain his wife in presence of good physique along with educational qualification. The view so taken by the High Court is unassailable. Indeed, the respondent has raised a plea to question the correctness of said view, in the reply affidavit filed in this appeal, but in our opinion, the finding recorded by the High Court is unexceptionable."*

***Janagarajan -Vs- Gowri Nandhini***

***C.R.P.(PD)(MD) No.1693 of 2015, Dated: 18.07.2018***

*The Hon'ble High Court of Madras held in para 15 that "In today's world, it is extremely difficult to conceive that a woman of her status would be in a position to manage within Rs.2,000/- per month. It can never be forgotten that the inherent and fundamental*

*principle behind Section 125 CrPC is for amelioration of the financial state of affairs as well as mental agony and anguish that woman sufferswhen she is compelled to leave her matrimonial home.*

*..... The principle of sustenance gets more heightened when the children are with her. Be it clarified that sustenance does not mean and can never allow to mean a mere survival. A woman, who is constrained to leave the marital home, should not be allowed to feel that she has fallen from grace and move hither and thither arranging for sustenance. As per law, she is entitled to lead a life in the similar manner as she would have lived in the house of her husband. And that is where the status and strata of the husband comes into play and that is where the legal obligation of the husband becomes a prominent one.*

*This being the position in law, it is the obligation of the husband to maintain his wife. He cannot be permitted to plead that he is unable to maintain the wife due to financial constraints as long as he is capable of earning."*

***Rajnesh -Vs- Neha & Another***

***Criminal Appeal No.730 of 2020 (CDJ 2020 SC page 809)***

*The Hon'ble Supreme Court of India held in above case that Part IV that" Even though a judicial discretion is conferred upon the Court to grant maintenance either from the date of application or from the date of the order in S.125(2) Cr.P.C., it would be appropriate to grant maintenance from the date of application in all cases, including Section 125 Cr.P.C. In the practical working of the provisions relating to maintenance, we find that there is significant delay in disposal of the applications for interim maintenance for years on end. It would therefore be in the interests of justice and fair play that maintenance is awarded from the date of the application...*

*It has therefore become necessary to issue directions to bring about uniformity and consistency in the Orders passed by all Courts, by directing that maintenance be awarded from the date on which the application was made before the concerned Court. The right to claim*

*maintenance must date back to the date of filing the application, since the period during which the maintenance proceedings remained pending is not within the control of the applicant."*

12. எனவே மேற்கண்ட மாண்புமிகு மேலமை நீதிமன்ற தீர்ப்புகளில் குறிப்பிட்டுள்ளபடி, எதிர்மனுதாரர் தனக்கு வருமானம் இல்லை என்று, போதுமான வருமானம் இல்லாத மனுதாரர் மனைவியை பராமரிக்க மறுக்க இயலாது.

13. மனுதாரர் வாடகை வீட்டில் வசித்து வருவதற்கு ஆதரவாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எதிர்மனுதாரருக்கு போதுமான வருமானம் உள்ளதாக நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாலும், வருமானம் இல்லாத மனுதாரர் மற்றும் மைனர் மகனை பராமரிக்க வேண்டியது எதிர்மனுதாரரின் கடமை என்பதாலும், வாழ்க்கை பொருளாதார காரணிகளை பரிசீலனை செய்து, மனுதாரர்களுக்கு மனு தாக்கல் செய்த தேதியிலிருந்து மாதம் தலா ரூ.10,000/- ஜீவனாம்சமாக வழங்க கூடியது சரியானது என்று இந்த நீதிமன்றம் முடிவு காண்கிறது.

முடிவாக மேற்சொன்ன காரணங்களால் எதிர்மனுதாரர் ஜீவனாம்சமாக மாதம் தலா ரூ.10,000/-த்தை மனுதாரர்களுக்கு இந்த மனு தாக்கல் செய்த 02.05.2018 ம் தேதியிலிருந்து வழங்க வேண்டும் என்றும், ஜீவனாம்ச தொகையை பிரதி ஆங்கில மாதம் 5 ம் தேதிக்குள் செலுத்த வேண்டும் என்றும், ஜீவனாம்ச நிலுவை தொகையை இந்த உத்தரவு தேதியிலிருந்து இரண்டு மாதத்திற்குள் வழங்க வேண்டும் என்று மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. இந்த வழக்கு தவிர்த்து வேறு வழக்குகளில் மனுதாரர்

எதிர்மனுதாரரிடம் இருந்து ஏதேனும் ஜீவனாம்சம் தொகை பெற்று இருந்தால் அத்தொகையை கழித்துக் ஜீவனாம்சம் வழங்கும் படி உத்தரவிடப்படுகிறது. எதிர்மனுதாரர் ரூ.10,000/-த்தை செலவு தொகையாக மனுதாரர்களுக்கு வழங்க உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு முழுவதும் என் மொழிதலுக்கிணங்க சுருக்கெழுத்து தட்டச்சர் உடனுக்குடன் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ம் ஆண்டு ஜீன் 18 ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

AMEENA A

Judicial Magistrate No.1, Arakkonam
Digitally signed by AMEENA A
DN: cn=AMEENA A, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

நீதித்துறை நடுவர் எண்.1,
அரக்கோணம்.

1. **<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சி பட்டியல்</u>** :

ம.சா.1 – பிரியா ( மனுதாரர்).

ம.சா.2– வாசுகி.

2. **<u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவண பட்டியல்:</u>**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | --- | மனுதாரர், எதிர்மனுதாரர் திருமண அழைப்பிதழ். |
| ம.சா.ஆ.2 | --- | மனுதாரர், எதிர்மனுதாரர் திருமண புகைப்படம். |
| ம.சா.ஆ.3 | ---- | மனுதாரரின் ஆதார் அட்டை நகல். |
| ம.சா.ஆ.4 | ---- | ம.சா.2 ன் ஆதார் அட்டை நகல். |
| ம.சா.ஆ.5 | --- | திருவள்ளூர் உதவி மருந்து கட்டுப்பாட்டு பொது தகவல் அதிகாரி வழங்கிய தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழான பதில். |
| ம.சா.ஆ.6 | --- | புகைப்படம் |
| ம.சா.ஆ.7 | --- | கூகுள் வலைதளத்தில் இருந்து எடுக்கப்பட்ட பிரிண்ட் அவுட் நகல் . |
| ம.சா.ஆ.8 | --- | ஸ்ரீராம் மெடிக்கல்ஸ் 2023-2024 வருடத்திற்கான GST வரி செலத்தியதற்கான ஆவண நகல். |
| ம.சா.ஆ.9 | | ஸ்ரீராம் மெடிக்கல்ஸ் 2024-2025 வருடத்திற்கான GST வரி செலத்தியதற்கான ஆவண நகல். |

3. **<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி பட்டியல்</u>** :
எ.சா.1 – விஜயகுமார் (எதிர்மனுதாரர்).
எ.சா.2– வெங்கடபதி

4. **<u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவண பட்டியல்:</u>**

| | | |
|---|---|---|
| எ.சா.ஆ.1 | --- | 01.05.2012 தேதியிட்ட வீடு குத்தகை ஒப்பந்த நகல். |
| எ.சா.ஆ.2 | --- | எதிர்மனுதாரர் சென்னை காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மற்றும் கிருஷ்ணமூர்த்தி என்பவரின் கடித நகல். |
| எ.சா.ஆ.3 | --- | வெங்கடபதி என்பவர் சென்னை காவல் ஆணையரிடம் கொடுத்த புகார் நகல். |
| எ.சா.ஆ.4 | --- | HMOP 73/2018 வழக்கின் நீதிமன்ற உத்தரவு சான்றிட்ட நகல். |
| எ.சா.ஆ.5 | --- | HMOP 94/2016 மனுவின் டாக்கெட் உத்தரவு நீதிமன்ற சான்றிட்ட நகல். |
| எ.சா.ஆ.6 | --- | மனுதாரர் பெயரிட்ட மெர்கண்டைல் மற்றும் இந்தியன் வங்கி காசோலை நகல். |
| எ.சா.ஆ.7 | --- | எதிர்மனுதாரர் 2011 ஏப்ரல் மாத சம்பள பட்டியல் மற்றும் ராஜனாமா ஏற்பு கடிதம். |
| எ.சா.ஆ.8 | --- | 2023–2024 ஆண்டிற்கான எதிர்மனுதாரரின் GST விண்ணப்பம் தாக்கல் செய்த நகல். |
| எ.சா.ஆ.9 | --- | 2024–2025 ஆண்டிற்கான எதிர்மனுதாரர் செலுத்த வேண்டிய சுய வருவாய் மதிப்பீட்டு வரி நகல். |
| எ.சா.ஆ.10 | --- | 09.09.2022 எதிர்மனுதாரர் ஆவடி கிளை இந்தியன் வங்கியில் பெற்ற கடன் ரூபாய் 5,00,000/–தவனை தொகை மற்றும் வட்டியும் வங்கி கணக்கு அறிக்கை. |

| | | |
|---|---|---|
| எ.சா.ஆ.11 | | எதிர்மனுதாரருக்கு அவருடைய மைத்துனர் பிரேம்ராஜா என்பவர் மெடிக்கல் ஷாப் தொடங்குவதற்கு முன்பணமாக கொடுத்த வங்கி பரிவர்த்தனை நகல் |

AMEENA A

Judicial Magistrate No.1, Arakkonam
Digitally signed by AMEENA A
DN: cn=AMEENA A, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

நீதித்துறை நடுவர் எண்.1(FAC),
அரக்கோணம்.